# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## August 24, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. வீடுகளில் சமையல் தேவைகளுக்கு திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய எரிவாயுவை (எல்பிஜி) பயன்படுத்துவதற்குப் பதிலாக, குழாய் வழி இயற்கை எரிவாயு (பிஎன்ஜி) பயன்பாட்டுக்கு விரைந்து மாறும் விரிவாக்க நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று மாநிலங்களிடம் மத்திய பெட்ரோலிய அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது. இதுதொடர்பாக அந்த அமைச்சக செயலர் நீரஜ் மிட்டல் மாநில தலைமைச் செயலர்களுக்கு அண்மையில் எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

i. பிஎன்ஜி பயன்பாட்டை விரைந்து அதிகரிப்பதன் மூலம், எல்பிஜி போக்குவரத்து மற்றும் விநியோகச் சுமையைக் குறைக்க முடியும்.

ii. பிஎன்ஜி பயன்பாட்டை விரைந்து அதிகரிக்க, 1955-ஆம் ஆண்டின் அத்தியாவசியப் பொருள்கள் சட்டத்தின் 3-ஆவது பிரிவின் கீழ் எல்பிஜி கட்டுப்பாட்டு உத்தரவுகள், 2026-ஆம் ஆண்டுக்கான இயற்கை எரிவாயு மற்றும் பெட்ரோலிய பொருள்கள் விநியோக உத்தரவுகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

iii. வசதியுள்ள பகுதிகளில் நோட்டீஸுக்கு பிறகும் மாறாவிட்டால்...:

- இந்த உத்தரவுகளின்படி, வீடுகளில் எல்பிஜி, பிஎன்ஜி ஆகிய 2 இணைப்புகளும் இருக்கக் கூடாது. சமையல் தேவைக்கு பிஎன்ஜியை நிலத்தடியில் குழாய் வழியாக விநியோகிக்கும் வசதியுள்ள பகுதிகளில், உரிய நோட்டீஸ் அளிக்கப்பட்ட பிறகும் பிஎன்ஜி இணைப்புக்கு விண்ணப்பிக்காத வீடுகளுக்கு எல்பிஜி விநியோகம் நிறுத்தப்படும்.
- இதற்காக ஒவ்வொரு பகுதியிலும் பிஎன்ஜி ஒருங்கிணைப்புக் குழுவை அங்கீகரிக்கப்பட்ட நகர எரிவாயு விநியோக நிறுவனங்கள், பொதுத் துறை எண்ணெய் சந்தைப் படுத்தும் நிறுவனங்கள் ஏற்படுத்த வேண்டும்.
- இந்தக் குழுக்கள் பிஎன்ஜி இணைப்பைப் பெறத் தகுதியுள்ள வீடுகளை அடையாளம் கண்டு, அதுகுறித்து நுகர்வோர், குடியிருப்போர் நலச் சங்கங்களுக்கு சட்டபூர்வ நோட்டீஸ் அளிக்கும்.
- அந்த இணைப்புகள் அதிகமாவதை விரைவுபடுத்த அக்குழுக்கள் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தும்.

iv. மாவட்ட நிர்வாகம் உதவ வேண்டும்:

- இந்தக் குழுக்களை அமைக்கும் முறை ஏற்கெனவே செயல்பாட்டில் உள்ளது. எனினும் நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குள் எல்பிஜியில் இருந்து பிஎன்ஜிக்கு மாறுவதை செயல்படுத்த மாவட்ட அளவிலான நிர்வாகத்தின் உதவி மிகவும் முக்கியம்.
- பிஎன்ஜி விநியோகத்துக்குத் தேவைப்படும் பாதை அல்லது நிலத்தைப் பயன்படுத்துவதற்கான சட்டபூர்வ அனுமதியைப் பெற மாவட்ட நிர்வாகம் உதவ வேண்டும். இதுசார்ந்து நுகர்வோரின் விவரங்களைச் சரிபார்த்து, அவர்களின் குறைகளைத் தீர்ப்பது உள்ளிட்ட பணிகளிலும் மாவட்ட நிர்வாகம் உதவ வேண்டும்.
- இந்தப் பணிக்கு உணவு மற்றும் குடிமைப் பொருள் வழங்கல் துறை அதிகாரிகள் மிகவும் பொருத்தமானவர்களாக இருப்பர். ஏனெனில் எல்பிஜி விநியோகஸ்தர்களுடன் அந்த அதிகாரிகளுக்கு அதிகாரபூர்வ தொடர்புள்ளது. அத்துடன் அவர்கள் கள அளவில் நேரடியாகப் பணியாற்றும் திறன் கொண்டவர்களாவர்.

v. நியமிக்க பொறுப்பு அதிகாரியை வேண்டும்:

- இந்தப் பணிக்காக மாவட்ட அளவில் ஒரு பொறுப்பு அதிகாரியை நியமிக்குமாறு உணவு மற்றும் குடிமைப் பொருள் வழங்கல் துறைக்கு மாநில தலைமைச் செயலர்கள் உத்தரவிட வேண்டும். அந்தப் பொறுப்பு அதிகாரி பிஎன்ஜி ஒருங்கிணைப்புக் குழுவுடன் இணைந்து செயல்பட வேண்டும்.
- பிஎன்ஜி பயன்பாட்டை குறிப்பிட்ட காலத்துக்குள் விரிவுபடுத்த வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியாக உள்ளது. எனவே, இந்த விஷயத்துக்கு மாநிலங்கள் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.
- மேற்காசியாவில் அமெரிக்கா-ஈரான் போர் காரணமாக, எல்பிஜி இறக்குமதியில் இடர்ப்பாடு ஏற்பட்டது.
- இதனால் பிஎன்ஜி பயன்பாட்டை விரிவுபடுத்துவதில் மத்திய அரசு தீவிரம் காட்டி வருகிறது.

2. தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜீத் தோவல் சீனாவுக்கு திங்கள்கிழமை (ஆக. 24) பயணம் மேற்கொள்கிறார். தலைநகர் பெய்ஜிங்கில் செவ்வாய்க்கிழமை (ஆக. 25) நடைபெறும் 25-ஆவது இந்திய-சீன சிறப்பு பிரதிநிதிகள் பேச்சு

வார்த்தையில் அவர் பங்கேற்கிறார்.

i. அஜீத் தோவல், சீன பாதுகாப்புத் துறைச் செயலர் வாங் யி ஆகியோர் இரு நாடுகளின் எல்லைப் பிரச்னைகள் குறித்துப் பேச்சு நடத்துவதற்கான சிறப்புப் பிரதிநிதிகளாக ஏற்கெனவே நியமிக்கப்பட்டுள்ளனர். கடந்த 2003-ஆம் ஆண்டுமுதல் இந்த சிறப்புப் பிரதிநிதிகள் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

ii. இந்தியாவும், சீனாவும் 3.488 கி.மீ. தொலைவுக்கு எல்லையைப் பகிர்ந்து கொண்டுள்ளன. இதில் பல இடங்களில் பிராந்தியங்கள் யாருக்கும் சொந்தம் என்ற பிரச்னை நிலவுகிறது. இதுதவிர இந்திய மாநிலமான அருணாசல பிரதேசத்துக்கும் சீனா உரிமை கொண்டாடி வருகிறது. சீனா ஏற்கெனவே ஆக்கிரமித்து வைத்துள்ள திபெத்தின் ஒரு பகுதிதான் அருணாசல பிரதேசம் என்று கூறும் அந்நாடு, அதை தெற்கு திபெத் என்று அழைத்து வருகிறது. அங்குள்ள சில இடங்களுக்கு கடந்த 2017- ஆம் ஆண்டு புதிய பெயர்களையும் குட்டியது. இந்தியா இதற்கு கடும் கண்டனமும், எதிர்ப்பும் தெரிவித்தது.

iii. 2020-ஆம் ஆண்டு கல்வான் பள்ளத்தாக்கில் இரு நாட்டு வீரர்களுக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டபோது எல்லைப் பிரச்னை மிகத் தீவிரமடைந்தது. அதன் பிறகு படிப்படியாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, பிரச்னைகளுக்குரிய இடங்களில் இருநாடுகளும் படைகளை விலக்க ஒப்புக்கொண்டதால் இப்போது எல்லைப் பதற்றம் வெகுவாக தணிந்துள்ளது.

iv. தில்லியில் செப்டம்பர் 12, 13 தேதிகளில் நடைபெறும் பிரிக்ஸ் மாநாட்டில் பங்கேற்க சீன அதிபர் ஷி ஜின்பிங் இந்தியாவுக்கு வருகிறார். அப்போது இரு தலைவர்களும் பல்வேறு முக்கிய விஷயங்கள் குறித்து முடிவுகளை எடுக்க வாய்ப்புள்ளது. இந்தச் சூழ்நிலையில் அஜீத் தோவல்-வாங் யி பேச் சுவார்த்தை முக்கியத்துவம் பெற்றுள்ளது.

3. மக்களவையும் மாநிவங்களவையும் தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டு 10 நாள்களுக்கும் மேலாகி விட்டபோதிலும், நாடாளுமன்ற மழைக் கால கூட்டத்தொடர் முறைப்படி முடித்துவைக்கப்படவில்லை. இதன்மூலம் சிறப் புக் கூட்டத்தைக் கூட்டி தொகுதி மறுசீரமைப்பு மசோதாவை நிறைவேற்ற மத்திய அரசு முயற்சிப்பதாக காங்கிரஸ் பொதுச் செயலர் ஜெய்ராம் ரமேஷ் கூறியுள்ளார்.

i. கடந்த ஏப்ரலில் நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்ட அரசமைப்புச்

சட்டத்தின் 131-ஆவது திருத்த மசோதா வின்படி (தொகுதி மறுசீரமைப்பு), மக்களவையில் மகளிருக்கு 33 சதவீதம் இடஒதுக்கீடு அளிக்கும் வகையில் மக்களவைத் தொகுதிகளை அதிகபட்சமாக 850 வரை அதிகரிக்க வேண்டும் என்பது மத்திய அரசின் திட்டம். இதேபோல அந்த மசோதாவின்படி, மாநில மற்றும் யூனியன் பிரதேச சட்டப்பேரவைகளில் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிக்கப்படும்.

ii. எனினும் இந்த மசோதாவை மக்களவையில் நிறைவேற்ற மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை. இந்த மசோதாவுக்கு எதிர்க்கட்சிகள், குறிப்பாக தென் மாநிலங்கள் (ஆந்திரம் தவிர) ஆதரவு அளிக்கவில்லை.

iii. இந்த மசோதாவின் அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டால், அது மக்கள்தொகையை திறம்பட கட்டுப்படுத்தியதங்களைப் பெரிதும் பாதிக்கும் என்று தென் மாநிலங்கள் கவலை தெரிவித்துள்ளன. அத்துடன் அது மக்களவையில் தங்கள் பலத்தைக் குறைக்கும் என்றும் இந்த மாநிலங்கள் குறிப்பிட்டுள்ளன.

iv. இதையடுத்து, அந்த மசோதாவை சில திருத்தங்களுடன் மீண்டும் கொண்டு வர மத்திய அரசு முயற்சித்து வருகிறது. அதில் அனைத்து மாநிலங்களின் மக்களவைத் தொகுதிகளும் 50 சதவீதம் அதிகரிக்கப்படும் என்ற அம்சம் சேர்க்கப்பட வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

4. லோகாயன் 26' எனும் உலகளாவிய கடல் பயணத்தின் ஒரு பகுதியாக, போர்ச்சுகலின் லிஸ்பன் நகர துறைமுகத்தை வந்தடைந்தது இந்திய கடற்படையின் ஐஎன்எஸ் சுதர்ஷினி பாய்மர பயிற்சிக் கப்பல் மற்றும் கடற்படை அதிகாரிகள்.

5. எஃப்1 கார் பந்தயத்தின் டச்சு கிராண்ட் ப்ரீ ரேஸில், பிரிட்டன் வீரரும், மெக்லாரென் டிரைவருமான லாண்டோ நோரிஸ் வெற்றி பெற்றார். நடப்பு சீசனின் 12-ஆவது ரேஸான இதில், நோரிஸ் தொடர்ந்து 2-ஆவது வெற்றியைப் பதிவு செய்துள்ளார்.

6. இந்தியா தனது மூன்றாவது தேசிய விண்வெளி தினத்தை 2026-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23-அன்று கொண்டாடியது.

7. இந்திய நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் மாலத்தீவின் மிகப் பெரிய உள்கட்டமைப்புத் திட்டத்தில், முக்கிய மைல்கல் எட்டப்பட்டுள்ளதாக அந்நாட்டில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

i. கிரேட்டர் மாலி இணைப்புத் திட்டம் என்பது திலமாலி பாலத் திட்டம் என்றும் அழைக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், மாலத்தீவு தலைநகர் மாலியை வில்லிங்லி, குல்ஹிஃபலு, திலஃபுஷி ஆகிய தீவுகளுடன் இணைக்க கடலுக்கு குறுக்கே 6.74 கி.மீ நீளம் கொண்ட பாலம் மற்றும் சாலை அமைக்கப்படுகிறது.

ii. இந்தியாவிடம் இருந்து 400 மில்லியன் டாலர் கடன் (சுமார் ரூ.3,828 கோடி), அமெரிக்காவிடம் இருந்து 100 மில்லியன் டாலர் (சுமார் ரூ.957 கோடி) நிதியுதவியில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. இது மாலத்தீவின் மிகப் பெரிய உள்கட்டமைப்புத் திட்ட மாகும்.

iii. இந்தத் திட்டத்தை மேற்கொள்வதற்கான ஒப்பந்தம், கடந்த 2021- இல் இந்தியாவின் ஆஃப்கான்ஸ் உள்கட்டமைப்பு நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்டது. தற்போது அந்தத் திட்டத்தின் 75 சதவீதத்துக்கும் அதிகமான பணிகள் நிறைவடைந்துள்ளன.

8. இலங்கையின் 22-ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் குறித்து தேசிய அளவில் மக்களிடம் நேரடி வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று இலங்கை தமிழரசு கட்சி வலியுறுத்தியது.

i. இலங்கையில் உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஓய்வுபெறும் வயதை 65- இல் இருந்து 67-ஆகவும், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மாவட்ட நீதிபதிகள், மாஜிஸ்திரேட்டுகளின் வயதை 62-ஆகவும் அதிகரிக்க அந்நாட்டின் 22-ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் 2026 வழிவகை செய்கிறது. இந்தத் திருத்தம் அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது என்று தெரிவித்து, அந்நாட்டு உச்சநீதிமன்றத்தில் பல எதிர்க்கட்சிகள் மனு தாக்கல் செய்துள்ளன.

9. ஆக்கிரமிப்புகளின் அளவு மற்றும் இருப்பிடம்

- சூழலியல் ரீதியாக உணர்திறன் மிக்க மண்டலம்: தமிழ்நாட்டின் களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் (KMTR), ஸ்ரீவில்லிபுத்தூர்-மேகமலை புலிகள் காப்பகம் (SMTR) மற்றும் கன்னியாகுமரி வனவிலங்கு சரணாலயம் ஆகியவற்றை உள்ளடக்கிய அகத்தியமலை உயிர்க்கோளக் காப்பகத்தின் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகள், தொடர்ந்து நடைபெறும் மற்றும்

விரிவடைந்து வரும் ஆக்கிரமிப்புகளால் பாதிக்கப்பட்டுள்ளன.

- SMTR ஆக்கிரமிப்புப் பகுதி: ஸ்ரீவில்லிபுத்தூர்-மேகமலை புலிகள் காப்பகத்தில் மட்டும், சுமார் 5,072 ஹெக்டேர் வன நிலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

(i) ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் கட்டுமானங்களின் தன்மை

- பழங்குடியின சமூகத்தினர் மற்றும் ஏழைத் தொழிலாளர்கள் தங்கள் அடிப்படை வாழ்வாதாரத்திற்காகக் குடிசைகளில் வசித்து வரும் அதே வேளையில், வசதி படைத்த தனிநபர்கள் விடுமுறைக்கால இல்லங்களையும் ஆடம்பர ஓய்வு விடுதிகளையும் (resorts) அமைத்துள்ளனர்.
- அதிர்ச்சியூட்டும் விதமாக, ராணுவம், காவல்துறை, சிஆர்பிஎஃப் (CRPF), வனத்துறை, வருவாய்த்துறை, மின்சார வாரியம் மற்றும் பள்ளி கல்வித்துறை ஆகியவற்றைச் சேர்ந்த 118 அரசு ஊழியர்கள் (பணியில் உள்ளவர்கள் மற்றும் ஓய்வு பெற்றவர்கள்), பாதுகாக்கப்பட்ட நிலத்தில் 15 ஹெக்டேர் பரப்பளவை சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ளனர்.
- மேலும், முன் அனுமதியின்றி இந்தப் பாதுகாக்கப்பட்ட மண்டலத்தில் 116 அரசு மற்றும் பொதுப் பயன்பாட்டுக் கட்டுமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(ii) உச்ச நீதிமன்றத்தின் உத்தரவு மற்றும் சட்ட நடவடிக்கைகள்

- நீதிபதிகள் விக்ரம் நாத் மற்றும் சந்தீப் மேத்தா ஆகியோர் அடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு, இந்த ஆக்கிரமிப்புகள் தொடர்பான வழக்கை புதன்கிழமை (ஆகஸ்ட் 19, 2026) விசாரித்தது.
- முன்னதாக உத்தரவிட்டபடி மாநில அரசு ஆக்கிரமிப்புகளை விரைவாக அகற்றத் தவறினால், அவற்றை அகற்றுவதற்கு துணை ராணுவப் படைகளை ஈடுபடுத்த உத்தரவிடப்படும் என்று நீதிமன்றம் கடுமையான எச்சரிக்கை விடுத்தது.
- தமிழ்நாட்டின் தரப்பு வழக்கறிஞர் ஜெய்தீப் குப்தா வாதிடுகையில், SMTR வனப்பகுதியில் 4,600-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருவதாகவும், அவர்கள் இலவம் பஞ்சு (silk-cotton) சாகுபடியில் ஈடுபட்டு வருவதாகவும் குறிப்பிட்டார். பலர் தலைமுறைகளாக அங்கு வசித்து வருவதால், அவர்களை வெளியேற்றுவதற்கு முன் மாற்று வீடுகள் வழங்கப்பட வேண்டும் என்றும், அப்பகுதியில் உள்ள வணிக ரீதியான ஓய்வு விடுதிகள் ஏற்கனவே மூடப்பட்டுவிட்டன என்றும் கூறி, கூடுதல் கால அவகாசம் கோரினார்.

(iii) மனித மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகள்

- வனவிலங்குகளின் இயல்பான வழித்தடங்களை ஆக்கிரமிப்பது,

விலங்குகளை மனித குடியிருப்புகளுக்குள் நுழையத் தூண்டுகிறது.

- 2026-ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஆகஸ்ட் வரையிலான காலகட்டத்தில், நீலகிரி மாவட்டத்தில் காட்டு யானைகளின் தாக்குதலுக்கு குறைந்தது 7 பேர் பலியாகியுள்ளனர். மேலும், கூடலூருக்கு அருகிலுள்ள ஓ-வேலி (O-Valley) பகுதியில், இரண்டு வார இடைவெளியில் புலித் தாக்குதல்களால் இருவர் உயிரிழந்தனர்.

(iv) புறக்கணிக்கப்பட்ட சுற்றுச்சூழல் எச்சரிக்கைகள் குறித்த வரலாற்றுச் சான்றுகள்

- காட்கில் அறிக்கை (2011): சாலைகளுக்காக மலைகளை வெட்டுவதும், சூழலியல் ரீதியாக உணர்திறன் மிக்க பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளுக்கான தங்கும் விடுதிகளைக் கட்டுவதும் பெரும் பேரிடர்களுக்கு வழிவகுக்கும் என்று சூழலியலாளர் மாதவ் காட்கில் தலைமையிலான நிபுணர் குழு 2011-ல் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தை எச்சரித்தது.
- வயநாடு பேரிடர் (கேரளா): அதிக ஆபத்துள்ள பகுதிகளில் வசிக்கும் 4,000 குடும்பங்களை வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டும் என்று கேரள மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் 2020-ல் எச்சரித்தது. இந்த எச்சரிக்கை புறக்கணிக்கப்பட்டதன் விளைவாக, ஜூலை 2024-ல் (முண்டக்கை மற்றும் சூரல்மலையில்) ஏற்பட்ட பயங்கர நிலச்சரிவில் 400-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்; எண்ணற்ற வீடுகள் அழிந்தன.
- இமயமலைப் பகுதி நிலச்சரிவு மற்றும் நிலச்சரிவு அபாயம்: கட்டுப்பாடற்ற கட்டுமானப் பணிகளால் உத்தரகண்ட் மற்றும் இமாச்சலப் பிரதேசத்தில் தினசரி நிலச்சரிவுகள் நிகழும் சூழல் உருவாகியுள்ளது; இமயமலைப் பகுதியிலுள்ள ஜோஷிமத் (Joshimath) நகரம் நிலத்திற்குள் புதையும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளது.

(v) முன்மொழியப்பட்ட தீர்வுகள் மற்றும் அடுத்தகட்ட நடவடிக்கைகள்

- அகஸ்தியமலை வனப்பகுதிகளில் தற்போது வசித்து வரும் 4,600 குடும்பங்களுக்கு மாற்று வீடுகள் மற்றும் வாழ்வாதாரங்களை அரசு விரைவாக ஏற்பாடு செய்ய வேண்டும்.
- பாதுகாக்கப்பட்ட வன நிலங்களை வேண்டுமென்றே ஆக்கிரமித்த 118 அரசு ஊழியர்கள் மீது கடுமையான சட்ட மற்றும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- எதிர்கால ஆக்கிரமிப்புகளைத் தடுக்க, வாக்கு வங்கி அரசியல் அல்லது

எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களுக்கு அஞ்சாமல், மாநில அரசு சூழலியல் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளித்து உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

## 10. அரசுப் பள்ளிகள் மூடப்படுவது ஒரு தேசிய நெருக்கடி

- பள்ளிகள் மற்றும் மாணவர் சேர்க்கை குறைவு: இந்தியா முழுவதும் கடந்த 10 ஆண்டுகளில் 94,000 அரசுப் பள்ளிகள் மூடப்பட்டுள்ளன; இதனால் அரசுப் பள்ளிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கையில் 2.26 கோடி என்ற அளவிலான பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது.
- தனியார் கல்விக்கு மாறுதல்: நாடு முழுவதும் அரசுப் பள்ளி மாணவர்களின் விகிதம் 2005-இல் 71%-ஆக இருந்த நிலையில், 2024–25-இல் அது 49.24%-ஆகக் கடுமையாகக் குறைந்துள்ளது.
- நிதி ஒதுக்கீடு தொடர்பான சிக்கல்கள்: 2010-ஆம் ஆண்டின் 'கல்வி உரிமைச் சட்டத்தின்' (RTE) கீழ், மத்திய அரசு 65% மற்றும் மாநில அரசுகள் 35% என்ற விகிதத்தில் நிதியைப் பகிர்ந்துகொள்ளப் பரிந்துரைக்கப்பட்டது. இருப்பினும், மத்திய அரசின் குறிப்பிட்ட பள்ளிசார் கொள்கைகளை ஏற்காத மாநிலங்களுக்கு, அதற்கான கல்வி நிதியை விடுவிக்க மத்திய அரசு மறுத்து வருகிறது.

i. தமிழ்நாட்டின் மாவட்டங்களில் மாணவர் சேர்க்கை நெருக்கடி

- நீலகிரி மாவட்டம்: 48 அரசுப் பள்ளிகளில், முதலாம் வகுப்பில் புதிதாக ஒரு மாணவர் கூடச் சேரவில்லை; மேலும் 20 பள்ளிகளில் மொத்த மாணவர் எண்ணிக்கை பூஜ்ஜியமாகப் பதிவாகியுள்ளது.
- திருச்சி மாவட்டம்: மொத்தம் 44 அரசுத் தொடக்கப் பள்ளிகளில் 10-க்கும் குறைவான குழந்தைகளே பதிவு செய்யப்பட்டுள்ளனர்.
- மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தமிழ்நாட்டில் பள்ளிகள் மூடப்படும் விகிதம் குறைவாக இருந்தாலும், பல பள்ளிகள் ஒன்று அல்லது இரண்டு ஆசிரியர்களைக் கொண்ட பள்ளிகளாக மாறி வருகின்றன; இதனால் அவை எதிர்காலத்தில் மூடப்படும் அபாயத்திற்கு உள்ளாகின்றன.

ii. (செயல்முறை விளக்கங்கள்: சிதிலமடைந்த பள்ளிகளை நம்பிக்கையின் மையங்களாக மாற்றுதல்

உள்ளூர் சமூகங்களின் ஆதரவுடன் தனிப்பட்ட ஆசிரியர்கள் காட்டிய அர்ப்பணிப்பு உணர்வு, நலிவடைந்த பல பள்ளிகளை வெற்றிகரமாக

மீட்டெடுத்தது:

- நடுப்பாளையம் தொடக்கப் பள்ளி (ஈரோடு மாவட்டம்):
- 2018-இல், இந்தப் பஞ்சாயத்து யூனியன் பள்ளியில் வெறும் 2 மாணவர்கள் மட்டுமே இருந்தனர்.
- தலைமையாசிரியர் சக்திவேல் உள்ளூர் கிராம மக்களை அணுகி அவர்களின் கவலைகளைக் கேட்டறிந்தார். மாணவர்களின் படைப்பாற்றலை மேம்படுத்த, சிறப்பு ஆங்கிலக் கற்பித்தல் மற்றும் வாராந்திரப் பயிற்சி வகுப்புகளை அவர் அறிமுகப்படுத்தினார்.
- இன்று, அப்பள்ளியில் மாணவர் சேர்க்கை 90-ஆக உயர்ந்துள்ளது.
- முகப்பேர் மாநகராட்சித் தொடக்கப் பள்ளி (சென்னை):
- 1935-இல் தொடங்கப்பட்ட இப்பள்ளியில், மாணவர் எண்ணிக்கை 2009-க்குள் வெறும் 35-ஆகக் குறைந்துவிட்டது.
- தலைமையாசிரியர் கிருஷ்ணவேணி பொறுப்பேற்று, உள்ளூர் மக்களின் ஆதரவுடன் நிர்வாகம் மற்றும் கல்வி சார்ந்த குறிப்பிட்ட மேம்பாட்டு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தினார்.
- மாணவர் சேர்க்கை 205 ஆக உயர்ந்தது, மேலும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 2-லிருந்து 6-ஆக அதிகரித்தது. குறிப்பிடத்தக்க வகையில், இப்பள்ளி தற்போது ஆட்டிசம் (autism) பாதிப்புள்ள 27 குழந்தைகளுக்குக் கல்வி மற்றும் ஆதரவை வழங்கி வருகிறது.
- நகராட்சி முஸ்லிம் உருது தொடக்கப் பள்ளி, பண்ருட்டி (கடலூர் மாவட்டம்): 1926-இல் தொடங்கப்பட்ட இப்பள்ளியில், 2014-ஆம் ஆண்டில் வெறும் 5 மாணவர்கள் மட்டுமே இருந்தனர்.
- தலைமை ஆசிரியை பிரேமலதா, சக ஆசிரியர்கள் மற்றும் உள்ளூர் மக்களின் ஆதரவுடன் மாணவர் சேர்க்கையை அதிகரிக்கப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார்.
- தற்போது இப்பள்ளியில் 200 குழந்தைகள் (மழலையர் வகுப்புகளில் 60 பேர் மற்றும் 1 முதல் 5-ஆம் வகுப்பு வரை 140 பேர்) பயில்கின்றனர்; இவர்களுக்கு 5 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர்.
- அரசு நடுநிலைப் பள்ளி, ராமநாதபுரம் (திருவொற்றியூர், சென்னை):
- 2013-இல் தலைமை ஆசிரியை முத்துச்செல்வி பொறுப்பேற்றபோது, பள்ளியில் 130 மாணவர்கள் மட்டுமே இருந்தனர்.
- உள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும்

மாநகராட்சி நிதியைப் பயன்படுத்தி, பள்ளி தனது உள்கட்டமைப்பை மேம்படுத்த இரண்டு புதிய கட்டிடங்களைக் கட்டியது. ஆசிரியர்களின் பணி கலாச்சாரம் நவீனப்படுத்தப்பட்டதுடன், கூடுதல் ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டனர்.

- தற்போது மாணவர்களின் எண்ணிக்கை 567-ஆக உயர்ந்துள்ளது; இவர்களுக்கு 11 அரசு ஆசிரியர்களும், பள்ளி மேலாண்மைக் குழுவால் நியமிக்கப்பட்ட 10 ஆசிரியர்களும் கல்வி கற்பிக்கின்றனர்.

iii. கொள்கை சீர்திருத்தங்களுக்கான முக்கிய உத்திகள்

- மழலையர் பள்ளிகள் - ஒரு நுழைவாயில்: அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் LKG மற்றும் UKG வகுப்புகளைத் தொடங்குவது மிக அவசியமாகும். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைத் தனியார் மழலையர் பள்ளிகளில் சேர்க்கும்போது, 1-ஆம் வகுப்புக்காக அவர்களை அரசுப் பள்ளிகளுக்கு மாற்றுவது அரிதாகவே நிகழ்கிறது. அரசு நடத்தும் மழலையர் பள்ளிகள், நீண்ட கால மாணவர் சேர்க்கையை உறுதி செய்வதற்கான முக்கிய நுழைவாயில்களாகச் செயல்படுகின்றன.
- முறையான தணிக்கைக்கான அவசரத் தேவை: மாணவர் எண்ணிக்கை குறைவதற்கான காரணங்களை மாநில அரசு முழுமையாக ஆய்வு செய்ய வேண்டும். அரசுப் பள்ளிகளைப் பாதுகாக்கும் வகையில், உள்கட்டமைப்பின் தரம், வகுப்பறைகளின் இருப்பு, தூய்மையான கழிப்பறை வசதிகள் மற்றும் ஆசிரியர் பற்றாக்குறை ஆகியவை குறித்து அரசு தணிக்கை செய்ய வேண்டும்.